THE COURT OF THE SUBORDINATE JUDGE, METTUR

**M.C.O.P.No.51/2017**

Deposition of PW.1 witness of Plaintiff/Petitioner/Defendant/Respondent solemnly affirmed by Bench Clerk in OP Section of this court in accordance with the provisions of Oaths Act 1969 (Act 44 of 1969) on 03.03.2023.

**Evidence Recorded Time: 12.03 P.M. to 12.15 P.M**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | முருகன் | **Caste** | : | |
| **S/o & W/o.** | : | லட்சுமணன் | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**கூடுதல் முதல் விசாரணை** :-

நான் இதில் மனுதாரர் ஆவேன். எனது கூடுதல் சத்திய பிராமாண வாக்கு மூலம் தாக்கல். அதில் கண்ட சங்கதிகளை படிக்க கேட்டு அவைகள் உண்மை என தெரிந்து கையெழுத்து செய்தேன். மேற்படி வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் உண்மைதான். பின்வரும் ஆவணங்களை என் தரப்பு சான்று ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்,

| | | | |
|---|---|---|---|
| ம.சா.ஆ.1– | – | முதல் தகவல் அறிக்கை | – நகல் |
| ம.சா.ஆ.2– | – | மனுதாரரின் ஆதார் அட்டை அசலோடு ஒப்புநோக்கப்பட்டு குறியீடு செய்யப்பட்டது | – நகல் |
| ம.சா.ஆ.3– | – | மனுதாரரின் குடும்ப அட்டை அசலோடு ஒப்புநோக்கப்பட்டு குறியீடு செய்யப்பட்டது | – நகல் |
| ம.சா.ஆ.4– | – | காயச் சான்றிதழ் | – நகல் |
| ம.சா.ஆ.5– | – | எதிர்மனுதாரர் வாகனத்தின் இன்சூரன்ஸ் பாலிசி | – நகல் |
| ம.சா.ஆ.6– | – | மனுதாரர் ஓட்டி சென்ற வாகனத்தின் பதிவு சான்றிதழ் | – நகல் |
| ம.சா.ஆ.7– | – | எதிர்மனுதாரர் வாகனத்தின் உரிமையாளர் சான்று | – நகல் |
| ம.சா.ஆ.8– | – | மனுதாரரின் வங்கி கணக்கு புத்தகம் அசலோடு ஒப்புநோக்கப்பட்டு குறியீடு செய்யப்பட்டது | – நகல் |
| ம.சா.ஆ.9– | – | மாதிரி வரைபடம் | – நகல் |
| ம.சா.ஆ.10– | – | மோட்டார் வாகன ஆய்வறிக்கை | – நகல் |
| ம.சா.ஆ.11– | – | விடுவிப்பு சான்று | – அசல் |
| ம.சா.ஆ.12– | – | விபத்து பதிவேடு | – நகல் |

| | | | |
|---|---|---|---|
| ம.சா.ஆ.13– | – | மருத்துவ பில்கள் | – அசல் |
| ம.சா.ஆ.14– | – | குற்றப்பத்திரிக்கை | –சான்றிட்ட நகல் |
| நீ.ம.சா.ஆ.1 | – | ஊனச் சான்றிதழ் (10 சதவீதம்) | – அசல் |

எனவே மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

(ம.சா.ஆ.4, 11 முதல் 13 வரையிலான ஆவணங்கள் 2–ம் எதிர்மனுதாரர் தரப்பு ஆட்சேபனையின் பேரில் குறியீடு செய்யப்பட்டது)

**2–ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை –**

விபத்து 10.04.2017 நடைபெற்றது என்றால் சரிதான். விபத்து சம்மந்தமாக 12.04.2017–ல் தான் முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். TN 69 AK 6829 இருசக்கர வாகனத்தில் செல்லும் போதுதான் விபத்து நடைபெற்றது என்றால் சரிதான். மேற்படி இருசக்கர வாகனத்தின் பதிவு சான்றிதழ், காப்பீட்டு நகல், எனது ஓட்டுநர் உரிமம் ஆகிய ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்து சமயத்தில் எனக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் விபத்து சமயத்தில் தொலைந்துவிட்டது. ஓட்டுநர் உரிமம் தொலைந்துவிட்டது என்ற பிறகு புதிதாக அது சம்மந்தமாக கேட்டு விண்ணப்பித்தீர்களா என்றால் இல்லை. விபத்து நடந்த தேதியிலிருந்து இன்று வரை நகல் ஓட்டுநர் உரிமம் பெறவில்லை என்றால் சரிதான். இன்றுவரை நான் ஓட்டுநர் உரிமம் இல்லாமல்தான் வாகனம் ஓட்டி வருகிறேன் என்றால் சரிதான். விபத்து சமயத்தில் எனது வண்டியை மோட்டார் வாகன ஆய்வாளரிடம் ஆய்விற்கு சமர்பித்தேனா என்றால் சமர்பித்தேன். அதற்கான மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையை தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. விபத்திற்கு என்னுடைய கவனக்குறைவும், ஆஜாக்கரதையும்தான் காரணம் என்றாலும் 1–ம் எதிர்மனுதாரர் பேரில் தவறு இல்லை என்றாலும், 2–ம் எதிர்மனுதாரர் நஷ்டஈடு கொடுக்கவேண்டியது இல்லை என்றாலும் சரியல்ல. நான் ஓட்டிச் சென்ற வாகனம் என்னுடையதுதான். விபத்தில் எனக்கும் பங்கு இருப்பதால் எனது வாகனத்தின் இன்சூரன்ஸ் நிறுவனத்தையும் ஒரு தரப்பினராக சேர்க்கவேண்டும் என்றாலும், அவ்வாறு ஒரு தரப்பினராக சேர்க்காத காரணத்தினால் எனது மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல. என்னுடைய வயது, தொழில், வருமானம் குறித்து ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் நஷ்டஈடு அதிகம் பெற வேண்டும் என்ற எண்ணத்தில் ஆட்டோ பைனான்சில் வேலை செய்து

மாதம் ரூ.20000/− சம்பாதித்து வருவதாக பொய்யாக கூறுகிறேன் என்றாலும் சரியல்ல. விபத்திற்கு பின்னிட்டு கடந்த ஆறு வருடங்காக தொடர்சிகிச்சை எடுத்துக்கொண்டதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்தில் ஏற்பட்ட காயங்கள் அனைத்தும் சரியாகிவிட்டது என்றாலும், விபத்தினால் எனக்கு எந்தவிதமான வருமான இழப்பு மற்றும் உடல் ஊனமும் ஏற்படவில்லை என்றாலும் சரியல்ல. நான் நஷ்டஈடு அதிகம் பெறுவதற்காக எனக்கு ஏற்பட்ட பாதிப்புகளை மிகைப்படுத்தி கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் கேரியுள்ள பரிகாரங்கள் மற்றும் அதற்கான தொகைகள் எனக்கு கிடைக்ககூடியது அல்ல என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் எடுக்கப்பட்ட நுண்கதிர்படங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேலும் மருத்துவ பில்கள் ம.சா.ஆ.13 வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. ம.சா.ஆ.4 மற்றும் ம.சா.ஆ.12 ஆகிய ஆவணங்களின் உண்மை நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி ஆவணங்கள் நகல் என்பதால் சட்டப்படி அதை ஆவணமாக பரிசீலிக்க முடியாது என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் 1−ம் எதிர்மனுதாரர் ஓட்டுநருக்கு உரிய ஓட்டுநர் உரிமம் இல்லை என்பதால் பாலிசி விதிகள் மீறப்பட்டுள்ளது என்பதால் எனக்கு 2−ம் எதிர்மனுதாரருக்கு நஷ்டஈடு வழங்கும் பொறுப்பு இல்லை என்றாலும், எனக்கு நஷ்டஈடு ஏதாவது கொடுக்கவேண்டும் என்றால் 1−ம் எதிர்மனுதாரர் தான் கொடுக்கவேண்டும் என்றாலும் மனு 2ம் எதிர்மனுதாரரை பொறுத்து தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல. நான் கோரியுள்ள நஷ்டஈடு அதிகம் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை −</u>** இல்லை.

ஒம்/−PW1,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/−S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டூர்.